**Judicial Form No.53**
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
**(Chapter XXII, Cr.P.C.)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTARATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 40 of 2022

Depositions of PW -2 witness for ________ Prosecution / Defence / Court

Name : ராமகிருஷ்ணன்

Father's Name : த/பெ. சுப்ரமணியம்

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 30th day of January 2023.

**முதல்விசாரணை**

1. நான் தற்போது காமாட்சி நகரில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவருடைய மில்லின் மேலாளராக பணியாற்றுகிறார். மில்லில் ஏற்பட்ட விபத்தில் என்னுடைய வலது கை மணிகட்டுடன் துண்டிக்கப்பட்டுவிட்டது.

2. கடந்த 12.03.2021 ம் தேதியன்று மதியம் 2.45 மணியளவில் நான் சிந்தாமணி புதூரில் உள்ள டிபிடெக்ஸ் என்ற மில்லில் பேல்பேக் மிசினில் வேலை பார்த்து கொண்டிருந்தபோது பிட்டர் லாரன்ஸ் என்னிடம் வந்து சிறிது நேரத்திற்கு ரோவின் மிசினை ஓட்டுமாறு மேலாளர் கூறியதாக என்னிடம் வந்து கூறினார். எனக்கு பேல்பேக் மிசினில் வேலை தான் நன்கு தெரியும். ரோவின் மிசினை ஓட்ட தெரியாது. ஓரளவிற்கு தான் ரோவின் மிசினை ஓட்ட தெரியும்.

3. அவர் கூறியதால் நான் ரோவின் மிசினை ஓட்ட சென்றேன். மிசினை ஓட்டி கொண்டிருந்தபோது அதனுள் பஞ்சு அடைத்து விட்டது. அதனால் நான் மிசினை நிறுத்தி விட்டு அடைத்து இருந்த முக்கால் வாசி பஞ்சினை எடுத்து விட்டேன். கால் வாசி பஞ்சு எடுக்க வேண்டியிருந்த நிலையில் மிசின் திடீரென கையை உள்ளே இழுத்தது. உடனே நான் கையை வெளியில் இழுக்கவும் மணிக்கட்டுன் கை துண்டிக்கப்பட்டு பகுதி மிசினின் உள்ளே சென்று விட்டது.

4. உடனே பிட்டர் என்னை இருசக்கர வாகனததில் ஏற்றி சரஸ்வதி மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். அங்கு முதலுதவி சிகிச்சை அளித்த பின்னர் கங்கா மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். மருத்துவமனையில் மணிக்கட்டுடன் துண்டான பகுதியை சேர்க்க முடியுமா என்று பார்த்தார்கள். ஆனால் சேர்க்க இயலவில்லை. அதனால் வலது கையில் பாதி துண்டான கையிற்கு சிகிச்சை அளித்தார்கள்.

5. 7 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். மருத்துவமனைக்கு வந்த மில்லின் உரிமையாளர் முதல் தகவல் அறிக்கை வேண்டாம் என்றும், எனக்கு இழப்பீடு தருவதாகவும், துண்டான பகுதிக்கு செயற்கை கை பொருத்துவதற்கு உதவி செய்வதாகவும், வேலை போட்டு தருவதாகவும் கூறினார். ஆனால் மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்ட பின்னர் அவர்கள் எனக்கு எதுவும் செய்யவில்லை. அதனால் நான் அளித்த புகாரின் பெயரில் முதல் தகவ்ல அறிக்கை பதிவு செய்யப்பட்டது. என்னிடம் காண்பிக்கபடும் புகார் நான் அளித்தது தான். **(புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**குறுக்கு விசாரணை**</u>

<u>1.</u> நான் டெக்ஸ்டைல் துறையில் 20 வருடங்களுக்கு மேலாக பணியாற்றுகிறேன். டிபி டெக்ஸ்டைல்சில் வேலைக்கு சேருவதற்கு முன்னர் கம்போடியா என்ற நிறுவனத்தில் நிரந்தர பணியாளராக பணியாற்றினேன் என்றால் சரிதான். அந்நிறுவனத்தில் எனக்கு இஎஸ்ஐ மற்றும் பிஎப் வசதி உள்ளது என்றால் சரிதான். நான் மேற்படி நிறுவனத்திலிருந்து முறைப்படியாக வேலையை விட்டு நிறுத்தவில்லை என்றால் சரிதான்.

2. நான் டிபி டெக்ஸ்டைல்சில் வேலையில் சேர்ந்ததற்கு பணிஉத்தரவு கடிதம் எதுவும் இல்லை என்றால் சரிதான். என்னிடம் பிட்டர் லாரன்ஸ் தான் ரோவின் மிசினில் வேலை பார்க்குமாறு கூறினார் என்றால் சரிதான். அம்மிசினில் 2 மணியிலிருந்து 2.45 மணி வரை வேலை பார்த்தேன். 2.45 மணியளவில் விபத்து ஏற்பட்டது. உணவு இடைவேளை 2 லிருந்து 3 மணி என்றால் சரியல்ல. 1.30 லிருந்து 2 மணி வரை ஆகும்.

3. ரோவின் பாபின் மிசினானது சரியில்லாத நூல்களை மீண்டும் பஞ்சாக அரைத்து கொடுக்கும். 3-1/2 மாதங்கள் கழித்து தான் புகார் அளித்துள்ளேன் என்றால் சரிதான்.

பிட்டர் லாரன்சிற்கு விபத்து குறித்த முழு விபரமும் தெரியும் என்றால் சரிதான். முழுமையாக நிறுத்தி வைத்திருந்த மிசினில் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். ரோவின் பாபின் மிசினின் தேவையே டிபி டெக்ஸ்டைல் நிறுவனத்திற்கு தேவையில்லை என்றாலும் நிறுத்திவைத்திருந்த மிசினை பார்க்க வேண்டும் என்ற ஆர்வத்தின் காரணமாக நான் சென்று இயக்கியதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்.

4. எதிரி ரோவின் மிசினை இயக்குமாறு என்னை அறிவுறுத்தவில்லை என்றாலும் என்னுடைய கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

G RUBANA Digitally signed by G RUBANA Date: 2023.01.30 19:53:09 +0530

**Signature of Witness** **நீதித்துறை நடுவர்**

**சூலூர்.**